**வனபரிபாலன திணைக்கள நிதியம் - 2022**

---

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பராயம்

வனபரிபாலன திணைக்கள நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயத்தை வெளியிடுகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நம்பிக்கைப் பொறுப்பின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நம்பிக்கைப் பொறுப்பின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நம்பிக்கைப் பொறுப்பு செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றுத

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதியத்தின் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் நியமத்தில் குறிப்பிடப்பட்ட வகையில் நிதி நிலைமை கூற்று மற்றும் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் அந்த மாதிரிகளுக்கு புறம்பாக ஐந்தொகையொன்றும் மற்றும் வருமானச் செலவினக் கணக்கொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது மேலும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைய வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல் கோவையின் 04 ஆம் இலக்கத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் காசு பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன் 2023 ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வேன் | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கும் அரச கணக்குகள் வழிகாட்டல் கோவைக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பகுதியின் 15.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்திற்காக வங்கி கணக்கு ஒன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வன பரிபாலனத் திணைகளத்தில் வங்கி கணக்குடன் இணைந்ததாக செயற்படுத்தப்பட்டிருந்தது. பொதுப் பேரேடு ஒன்றையும் நாட்குறிப்பேடொன்றையும் பேணாமல் பரீட்சை மீதி ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 268,733,101 ஆகவும் செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 270,237,978 ஆக இருந்ததால் வரவு பக்கம் மற்றும் செலவு பக்கங்களுக்கு இடையே ரூபா 1,504,877 ஆன வேறுபாடு ஒன்று அவதானிக்கப்பட்டது. | இணங்குகிறேன் 2023 ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது தவறை சீராக்கம் செய்வேன் | கணக்கு காலப்பகுதிக்குரிய வருமானம் அட்டுறு அடிப்படையில் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 2,284,576 ஆன நீதிமன்ற தண்டப்பணங்கள் முன்னைய ஆண்டின் சீராக்கங்களாக காண்பிப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வருமானமாக காண்பிக்கப்பட்டவையால் அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் வருமானம் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன் 2023 ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது தவறை சீராக்கம் செய்வேன் | வட்டி வருமானம் சரியாக கணக்கிட்டு கணக்குகளுக்கு உட்டுத்தப்பட வேண்டும். |
| (இ) | நிதியத்தின் நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 293,982 தொகை ஆக இருக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 350,708 ஆக ரூபா 56,726 கூடுதலாகவும் ரூபா 363,325 ஆக இருக்க வேண்டிய வருமானம் ரூபா 52,250 என்ற வகையில் ரூபா 311,075 குறைத்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | இணங்குகிறேன் 2023 ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது தவறை சீராக்கம் செய்வேன் - | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வனக் குற்றங்களுக்காக நீதிமன்றத்திலிருந்து அறவிடப்பட்ட தண்டப்பணத் தொகை நிதியத்தின் பிரதான வருமான மூலமாக இருந்த போதும் வன இலாகா அலுவலகங்களிலிருந்து மாதாந்தம் அறிக்கைகளைப் பெற்று ஒப்பீடு செய்து கிடைக்க வேண்டிய தொகை இனங்காணப்படாதிருந்ததுடன் பெற்றுக்கொண்ட தொகை மாத்திரம் வருமானமாக கருதப்பட்டிருந்தது. ஆதலால் வருமானம் சரியாக கணக்குகள் சீராக்கப்பட்டுள்ளதாக ஒப்பீடு செய்ய முடியவில்லை. | இணங்குகிறேன் 2023 ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது தவறை சீராக்கம் செய்வேன் | வன இலாகா அலுவலகங்களிலிருந்து மாதாந்தம் அறிக்கைகளைப் பெற்று அட்டுறு அடிப்படையில் சீரக்கம் செய்து சரியான வருமானத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | தகவல்கள் கோரப்பட்ட 91 நீதிமன்றங்களிலிருந்து 26 நீதிமன்றங்களில் இருந்து மாத்திரம் கிடைத்த தகவல்களின் பிரகாபரம் மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,544,877 மாத்திரம் ஐந்தொகைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் 2022 ஆம் ஆண்டிற்காக கிடைத்த நீதிமன்றத்தண்டப்பணம் ரூபா 1,202,434 தொகையும் பெறவேண்டிய தண்டப்பணங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்ணத்தின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்குகிறேன் 2023 ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது தவறை சீராக்கம் செய்வேன் | கணக்காண்டிற்குரிய அனைத்து நீதிமன்றத் தண்டப்பண வருமானத்தை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.6 முதலீட்டு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றுத

| <u>கணக்காய்வு அவதானிப்பு</u> | <u>முகாமைத்துவத்தின் கருத்துரை</u> | <u>பரிந்துரை</u> |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியால் வெளியடப்பட்ட ரூபா 700,000 ஆன நிலையான சான்றிதழ் நிதியத்திடம் காணப்பட்ட போதும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அதன் செல்லுபடிக் காலம் தொடர்பாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாகவும் நிதியத்திற்கு சுயாதீன வங்கிக் கணக்கொன்று திறக்கப்பட்டவுடன் இந்நிலைமை ஏற்படாது எனவும் அறிக்கையிடுகின்றேன். | நிதியத்தின் அனைத்து முதலீடுகளும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,443,723 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 18,927,751 ஆக இருந்தது. அதன் பிரகாரம், நிதிசார் விளைவுகளில் ரூபா 17,484,028 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ரூபா 17,419,301 இனால் பாதுகாப்பு செலவீனங்கள் அதிகரிந்தமை பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் சந்தை வட்டி வீதம் மிகவும் உயர்ந்த மட்டத்தில் அதிகரித்திருந்த போதும் நிதியத்தின் நிலையான வைப்பிற்காக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த வட்டி வீதம் முறையே 5.5, 7.75 மற்றும் 5.25 சதவீதமான மிகவும் குறைந்த பெறுமதியொன்றாகும். அதன் பிரகாரம் மிகவும் சாதகமான வகையில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படாதிருந்தமையால் பெற்றுக்கொள்ள முடியுமாமல் இருந்தமையால் பெற்றுக்கொள்ள இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிலையான வைப்புக்களை இரத்துச் செய்து 2023 ஆம் ஆண்டில் உள்ள சந்தை வட்டி வீதத்தின் கீழ் மீண்டும் முதலீடு செய்வதற்கு ஆலோசணை வழங்கியுள்ளேன். | மிகவும் சாதகமான வகையில் நிதியத்தின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வெகுமதி நிதியக் குறியீட்டின் கீழ் செலவிடப்பட்ட செலவினம் ரூபா 5,605,305 ஆக இருந்ததுடன் அது மொத்த செலவில் 13 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் குறித்த வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்து நிதியத்துக்கு தண்டப்பணம் செலவு வைக்கப்படும் போது 2019 ஆம் ஆண்டிலிருந்து உத்தியோகத்தரவுக்கு வெகுமதி தொகை வழங்கப்படாமல் இருந்தமை மற்றும் அதிக தாமதமாகப்பட்டு வழங்கப்படுவதாகவும் தகவல் வெளிப்படுத்தப்பட்டது. கொழும்பு வலய அலுவலகத்தின் உத்தியோகத்தற்காக நேரடியாக வழங்கப்பட்ட ரூபா 387,528 ஆன வெகுமதித் தொகை கொடுப்பனவு 2022 திசெம்பர் 20 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலப் காலத்தில் மாத்திரம் இடம் பெற்றுமைக்கான காரணம் தெளிவுபடுத்தப்படவில்லை | 2019 ஆம் ஆண்டு முதல் வெகுமதி தொகை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்று நிலைமையால் குழுக்கள் கூடுதல் மட்டுப்படுத்தப் பட்டதாலும் வழமையான கடமை நடவடிக்கைகள் முறையாக இடம் பெறாமையமே தாமத்திற்கு காரணமாகும் | காணப்படும் முறைமை மேம்படுத்தப்பட்டு வெகுமதி தொகை வழங்குவதில் தாமதம் தவிர்க்கப்பட்டு மிகவும் செயற்திறனான உயர்தரத்திலான சேவை ஒன்றை வழங்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.2 சர்ச்சைக்கரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் பாதுகாப்பு மற்றும் சட்ட செயற்பாட்டு பிரிவினதும் விசேட புலனாய்வு பிரிவினதும் கடமைகள் திணைக்களத்தின் வழமையான நிர்வாக நடவடிக்கைகளாக இருப்பதால் அச்செலவினம் திணைக்கருத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திறைசேரி நிதியே ஏற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அப்பிவின் எரிபொருளுக்காக நிதியத்தில் இருந்து 1,096,950 செலவிடப்பட்டிருந்தமை நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்காத வகையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த பிரிவின் மூலம் காடுகளை பாதுகாப்பதற்கு விசேட செயற்பணி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது அது வன கட்டளைச் சட்டத்தின் 64 (ஈ), (V) மற்றும் (VI) ஆம் பிரிவுகளுக்கு இணங்க இருப்பதால் இப்பிரிவிற்காக செலவிடப்பட்ட செலவினரமான பாதுகாப்பு நிதியத்தில் இருந்து செலவிடுவது பாதுகாப்பு் சட்டத்திற்கு முரணாக அல்ல என அவதானிக்கப்படுகின்றது | பிரதேச அலுவலகங்களில் இருந்தும் பிரதான அலுவலகங்கள் என்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய மற்றும் செயலாற்றலை மதிப்பீடு உற்பத்தி நிதியத்தின் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் திறைசேதி நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பிரிவுகளுக்காக நிதியத்தில் இருந்து செலவினம் மேற் கொள்ளக்கூடாது |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 1/2020 ஆம் இலக்க அரசு நிதிச் சுற்றறிக்கையின் I ஆம் பகுதியின் 15.1 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) இன் பிரகாரம் நிதியத்தின் ஆரம்பத்திலிருந்து வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 4.2 பாதீட்டுக்கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதியத்தின் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 70 மில்லியன் ஆக இருந்த போதும் உள்ளவாறான வருமானம் ரூபா 16 மில்லியன் ஆக இருந்தமையால் 77 சதவீதமான விலகலொன்று காணப்பட்டதுடன் முறையான மீளாய்வு ஒன்று இன்றி மதிப்பீடு தயாரித்தல் இதற்கு காரணமாக இருந்தது. | எதிர்காலத்தில் வருமான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது உள்ளவாராக அடையக்கூடிய பெறுமதி கருத்திற் கொள்ளப்பட்டு எதிர்பார்த்த இலக்குகளை நோக்கி அடைந்து கொள்ளக் கூடிய பாதீடொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியான எதிர் கூறலின் பிரகாரம் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | சட்ட மற்றும் பாதுகாப்பு செலவினங்களுக்கான ரூபா 12,000,000 ஆன ஆரம்ப மதிப்பீடு, திறைசேரியின் அங்கீகாரமொன்று இல்லாமல் ரூபா 42,000,000 என்ற வகையில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் அதன் உள்ளவாறான செலவினன் 8,222,902 மாத்திரமாக இருந்தது அதன் பிரகாரம் செலவினம் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட மதிப்பீட்டை 250 சதவீதத்தால் அதிககரித்தமை சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றாக இருந்தது. | இலங்கையில் முகம் கொடுத்துள்ள பொருளாதார பின்னணி நிதி பலவீனங்கள் மற்றும் சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகள் பற்றாக்குறையாக இருந்தமையால் எதிர்பார்த்த இலக்கை நோக்கி அடைவதற்கு முடியாதிருந்தது. | உரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு தேவைப்பாட்டின் அடிப்படையில் மதிப்பீடு திருத்தம் செய்யப்பட வேண்டும் |